# மே – 25 –வெள்ளி

**பாரிஸ் நகர் புனித மதலேன் மரியாள்**

**“கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.” –தி.பணி1:9**

## முதல் வாசகம் : யாக்கோபு 5 : 9 – 12

சகோதர சகோதரிகளே, நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதவாறு, ஒருவர் மற்றவருக்கு எதிராக முறையிடாதீர்கள். இதோ நடுவர் வாயிலில் நின்றுகொண்டிருக்கிறார். அன்பர்களே, நீங்கள் துன்பத்தைத் தாங்குவதிலும் பொறுமையைக் கடைபிடிப்பதிலும் ஆண்டவரின் பெயரால் பேசிய இறைவாக்கினரை உங்களுக்கு மாதிரிகளாகக் கொள்ளுங்கள். தளரா மனமுடையோர் பேறுபெற்றோர் என்கிறோம். யோபுவின் தளரா மனத்தைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இறுதியில் ஆண்டவர் என்ன செய்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஏனெனில், ஆண்டவர் மிகுந்த பரிவுள்ளமும் இரக்கமும் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக, என் சகோதர சகோதரிகளே, நீங்கள் ஆணையிடவே வேண்டாம். விண்ணுலகின்மீதும் மண்ணுலகின்மீதும் வேறு எதன்மீதும் ஆணையிடாதீர்கள். நீங்கள் ஆம் என்றால் ஆம் எனவும் இல்லை என்றால் இல்லை எனவும் சொல்லுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் தண்டனைத் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்

## நற்செய்தி : மாற்கு 10 : 1 - 12

அக்காலத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டு யூதேயப் பகுதிகளுக்கும் யோர்தான் அக்கரைப் பகுதிக்கும் வந்தார். மீண்டும் மக்கள் அவரிடம் வந்துகூடினர். அவரும் வழக்கம் போல மீண்டும் அவர்களுக்குக் கற்பித்தார்.பரிசேயர் அவரை அணுகி, ”கணவன் தன் மனைவியை விலக்கிவிடுவது முறையா?” என்றுகேட்டு அவரைச்சோதித்தனர்.அவர் அவர்களிடம் மறுமொழியாக, ”மோசே உங்களுக்கு இட்ட கட்டளை என்ன?” என்றுகேட்டார்.அவர்கள், ”மோசே மணவிலக்குச் சான்றிதழ் எழுதி அவரை விலக்கிவிடலாம் என்று அனுமதி அளித்துள்ளார்” என்று கூறினார்கள்.அதற்கு இயேசு அவரிகளிடம், ”உங்கள் கடின உள்ளத்தின் பொருட்டே அவர் இக்கட்டளையை எழுதி வைத்தார்.படைப்பின் தொடக்கத்திலேயே கடவுள். ”ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான்.இருவரும் ஒரே உடலாய் இருப்பர். “இனி அவர்கள் இருவர் அல்ல. ஒரே உடல்.எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” என்றார். பின்னர் வீட்டில் இதைப்பற்றி மீண்டும் சீடர் அவரைக்கேட்டனர். இயேசு அவர்களை நோக்கி, ”தன்மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணப்பவன் எவனும் அவருக்கு எதிராக விபசாரம் செய்கிறான். தன்கணவரை விலக்கிவிட்டு வேறொருவரை மணக்கும் எவளும் விபசாரம் செய்கிறாள்” என்றார்.

**தியானம்:** அன்றிலிருந்து இன்று வரை எம்மில் சிலர், அடுத்தவரது திருமணத்தை எப்படிப் பிரிப்பது? என்ன காரணம் சொல்லலாம்? என்று முயற்சி செய்துகொண்டே இருப்பதனை நாம் அறியாததல்ல. அத்தகைய முயற்சிகளுள் ஒன்றினை இன்றைய நற்செய்தி எடுத்துக்கூறுகிறது. ஆணும் பெண்ணும், இறுதிவரை திருமணத்தில் இணைந்து வாழும்போது மனித சமுதாயம் வாழும். திருமணமுறிவு, விவாகரத்து தொடருமாயின், எமது தலைமுறை வாழ்ந்து அழியும். திருமணத்தில் இணைந்தவரைப் பிரிக்கும் முயற்சி, தலைமுறையை அழிக்கும் முயற்சி என்பதனை மாற்கு நற்செய்தி சுட்டிக்காட்டுகின்றது. திருமணமான தம்பதியரது புரிந்துகொள்ளாமை, ஏற்றுக்கொள்ளாமை, மன்னிக்காமை, பாசம் கொள்ளாமை, நல்லதைப் பாராட்டாமை அனைத்துமே கடின உள்ளத்தின் வெளிப்பாடுகள் எனப்படும். மேலை நாடுகளில் பத்தில் ஆறு திருமணங்கள் முறிந்துவிடுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எமது தாயகத்திலும் விவாகரத்து விரிந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் அடுக்கடுக்காக வருகின்றன. திருமணங்களின் முறிவு மனித வாழ்வின் சீரழிவின் அடையாளம். மணவிலக்குகள் பெருகிவரும் இக்காலத்தில் மணவாழ்வு மிகப்பெரிய சவால் என்பதை நாமறிவோம். மணவிலக்கு, மணமுறிவு என்பதெல்லாம் கடின உள்ளத்தின் வெளிப்பாடுகள். எப்போது கணவன், மனைவியின் உள்ளம் கடினபட்டுவிட்டதோ, அப்போது அவர்களின் மனதில் மணமுறிவு ஏற்பட்டுவிடுகிறது. இன்றைய நற்செய்தியில், பரிசேயர் தங்களின் சுயநல முயற்சிக்கு பக்க துணையாக வேதாகமத்திலிருந்து மோசேயை துணைக்கு அழைத்துள்ளனர். ஆனால் இயேசுவோ தன்னுடைய பதிலில் மிகத்தெளிவாக உள்ளார். மோசேயின் விளக்கம் தவறு என்பதை மிக நாசுக்காக, உறுதிப்படுத்துகிறார். திருமணங்கள் கடவுள் இணைக்கும் ஒரு அருஞ்செயல். திருமணத்தில் இணையும் ஆணும் பெண்ணும் ஆண்டவன் செயல்பட உதவும் இன்றியமையாத கருவிகள். இந்தச் சமுதாயம் அவர்களுக்கு உதவும் கரங்கள். எனவே இதில் மனிதர்கள் யாருக்கும் பிரிக்கும் அதிகாரம் இல்லை. இறைவன் தானே முன்வந்து இணைத்த திருமணத்தை அவர் எத்தனை சிரமங்களுக்கு மத்தியிலும் மேன்மையுறச் செய்வார். ஆகவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.